# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

*[1982, மார்ச்சு மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, மார்ச்சு மாதம் 19 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 50*

# 1982 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[1982, மார்ச்சு மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 68/81
1484

**1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. இச்சட்டத்தில், இதன்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலம் ; அத்துடன்

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் :—

"(2) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பில் அல்லது 23 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வேதேனும் தவறுக்கு ஏற்புடைத்தாகுமோ அத்தவறு தொடர்பில் எவரேனும் ஆளுக்கெதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு பெறப்பட்டதன் மீது, நீதிமன்றமானது, ஒவ்வொரு விடயத்திலும், விளக்கம் முடிவுறும் வரையும் அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைக்கக் கட்டளையிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

3. பதினைந்தாம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"விளக்கம் முடிவுறும் வரைக்கும் தடுத்து வைத்தற்கான இடம்.

15அ. (1) பதினைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது 19 (அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் எவரேனுமாள் விளக்கமறியலில் உள்ளிடத்து, இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடு எப்படியிருப்பினும், பாதுகாப்பு என்னும் விடயம் பொறுப்பிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது செயலாளரானவர், தேசியப் பாதுகாப்பின் அல்லது பொது ஒழுங்கின் நலனை முன்னிட்டு அவ்வாறு செய்தல் அவசியமானதென அல்லது உசிதமானதென அவர் அபிப்பிராயப்படு

ஏ 61720—7,850 (03/82)

வாராயின், அத்தகைய ஆள் தொடர்பில் நேரியவிளக்க மொன்றை உறுதிப்படுத்துவதற்கு மேல்நீதிமன்றத்தினால் கொடுக்கப்படக்கூடியதான அத்தகைய பணிப்புகளுக்கு அமைவாக, அத்தகைய ஆள், செயலாளரால் அத்தகைய நலனைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாகவும் ஏதேனும் அதிகாரியின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுவதற்குக் கட்டளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையானது, மேல்நீதிமன்றத்துக்கும் மறியற்சாலைகள் ஆணையாளருக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியிடம் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பை ஒப்படைத்தல் அத்தகைய ஆணையாளரின் கடமையாதலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய ஆளின் கட்டுக்காப்பு தொடர்பாக மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாதொழிதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை நீக்குதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது, "சட்டவிரோதமான செயற்பாடு" என்பதன் வரைவிலக்கனத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

' "சட்டவிரோதமான செயற்பாடு" என்பது, எத்தன்மைத்தான எவ்வழியிலேனும், இலங்கைக்குள்ளேயாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி அத்துடன், இந்தச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் அல்லது அவற்றுள் எதுவும் நடைமுறைக்கு வருந் தேதிக்கு முன்னரோ பின்னரோ மேற்கொள்ளப்பட்டதாயினுஞ் சரி அல்லது புரியப்பட்டதாயினுஞ் சரி, இந்தச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிதலில் அல்லது இந்தச் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் நடவடிக்கை என்று, அல்லது புரியப்பட்ட ஏதேனும் செயல் என்று, அல்லது இச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதிக்கு முன்னர் புரியப்பட்டதும் அத்தகைய தேதியின்பின் புரியப்பட்டிருப்பின் இச்சட்டத்தின்கீழ் தவறென்றாக அமையக்கூடியதுமான ஏதேனும் செயல் என்று பொருளாகும்.'.

6. (1) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்படும் திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும், 1979 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

திருத்தம் கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுடையதாதல்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், எல்லா நோக்கங்களுக்காகவும், இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் அல்லது கருமத்தில், முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் பொருள்கோடல் பற்றிய ஏதேனும் பிரச்சினை எழுகின்றவிடத்து, அத்தகைய பிரச்சினை, இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.